- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **இவ்வினாக்களை பயிற்சி கொப்பியில் பிரதி செய்யவும்.**

01. "நாயனையார் **கேண்மை** கெழீஇக் கொளல்வேண்டும்" என்பதில் **கேண்மை** என்பதன் ஒத்தகருத்துச் சொல்

01. அன்பு 02. நட்பு 03. உறவு 04. பகை

02. "**பிணக்கு** அறுக்கும் மூத்தோரை இல்லா அவைக்களனும்" என்பதில் **பிணக்கு** என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்

01. ஒற்றுமை 02. இணக்கு 03. முரண்பாடு 04. சச்சரவு

03. "**தெண்ணீர்** கயத்துட் சிறு மீன்" என்பதில் **தெண்ணீர்** என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்

01. தெளிந்த நீர் 02. வெந்நீர் 03. குளிர்நீர் 04. கண்ணீர்

04. "பண்டே பழகி இருந்தாலும் அறியார் **புல்லோர்**" என்பதில் **புல்லோர்** என்ற சொல்லின் எதிர்க் கருத்துச் சொல்

01. தீயவர் 02. நல்லோர் 03. இனியோர் 04. விண்ணோர்

05. "பங்கப் **பழனத்து** உழுமுழவர்" என்பதில் **பழனம்** என்பதன் ஒத்த சொல்

01. சேறு 02. பழமை 03. வயல் 04. உழுதல்

06. "பொதிகை **வரை**யினிற் கால் கொண்டு" என்பதில் **வரை** என்பது

01. வரைதல் 02. மலை 03. ஆறு 04. கடல்

07. "**ஆடவருக்குரிய** ஆடையலங்காரப் போட்டி நடைபெற்றது". என்பதில் **ஆடவர்** என்ற சொல்லினது எதிர்ப்பாற் சொல்லாக அமைவது

01. விறலியர் 02. பூடவர் 03. பெண்டிர் 04. பரதவர்

08. "பொறாமை உடையவர்களிடம் **ஆக்கம்** உறைவதில்லை. இங்கே **ஆக்கம்** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

01. கேடு 02. உயர்வு 03. புகழ் 04. நன்மை

09. "நாம் **சுயாதீனத்**துடன் செயற்பட வேண்டும்" **சுயாதீனம்** என்ற சொல்லினது எதிர்க்கருத்துச் சொல்

01. பராதீனம் 02. பாரபட்சம் 03. சுதந்திரம் 04. சுயம்பரம்

10. “கார் தட்டிய **பஞ்சகாலத்**திலே தங்கள் ..” என்பதில் வரும் **பஞ்சகாலம்** என்பது

01. மழை 02. புகழ்தல் 03. வறுமை 04. புழமை

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

11. உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில்.....கோடி பெறும்.

01. உண்ணீர் 02. உண்ணாமை 03. உறங்குதல் 04. அமர்தல்

12. பக்ஸ் (fax) என்பதன் கலைச் சொல் வடிவம்

01. தொலை பிரதி 02. தொலை பன்னி 03. தொலை நகல் 04. தொலை காட்டி

13. மேகம் கறுத்து, மழை கொட்டியது - இது அமைப்பு அமைப்பு அடிப்படையில்.

01. தனி வாக்கியம் 02. தொடர்ந்து வாக்கியம் 03. கூட்டு வாக்கியம் 04. கலப்பு வாக்கியம்

14. யானையின் இளமைப் பெயர்.

01. போதகம் 02. குருளை 03. பறள் 04. பிள்ளை

15. “நீல வானப் பொய்கையில் நீந்துகின்ற வெண்ணிலாவே...” இதில் இடம்பெற்றுள்ள அணி

01. உவமை அணி 02. உயர்வு நவிற்சி அணி

03. உருவக அணி 04. சிலேடை அணி

16. கொடுத்த பொருளை அடுத்த பொழுதில் பாடுபவர்,

01. வசைக்கவி 02. வரகவி 03. ஆசுகவி 04. புதுக்கவி

17. பாட்டுக்கொரு புலவன் எனப்பாராட்டப்பட்ட பாரதி எட்டயபுரத்தில் பிறந்தான். இவ்வாக்கியத்தில் எழுவாய்

01. பாட்டு 02. புலவன் 03. பாரதி 04. எட்டயபுரம்

18. “நறுந்தாமரை விரும்பும் நன்னுதலே அன்னாள்” இதில் இடம்பெற்றுள்ள அணி

01. தற்குறிப்பேற்ற அணி 02. உவமையணி

03. உருவக அணி 04. தன்மை நவிற்சியணி

19. பேரறிவாளன் என்பதனைப் பிரித்தெழுதினால்

01. பெருமை அறிவாளன் 02. பெரிய அறிவாளன்

03. பெரு அறிவாளன் 04. தன்மை நவிற்சியணி

20. “குகனுக்கு நண்பன் இராமன்” இங்கு “கு” எனும் நான்காம் வேற்றுமை உருபு உணர்த்தி நிற்கும் பொருள்

01. கொடைப் பொருள் 02. நட்புப் பொருள்

03. காரணப் பொருள் 04. பகைப் பொருள்